## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்

## மடத்துக்குளம்

## அசல் வழக்கு எண்.125/2019

இன்று 2025 ம் ஆண்டு மார்ச் திங்கள் 11ம் நாள் இன்று இந்த சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது பிரிவு ஏற்பாட்டின் படி ) திரு.கோ.விஜயகுமார், பி.எஸ்.சி., பி.எல்., மடத்துக்குளம் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையிட்டு உறுதி மொழி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | பொன்ராஜ் (Pw2) |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | பொன்னுச்சாமி |
| வயது | : | |
| கிராமம் | : | மெட்ராத்தி |
| தொழில் | : | |
| வட்டம் | : | மடத்துக்குளம் |
| மாவட்டம் | : | திருப்பூர் |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு சாட்சி 2 ஆவேன். வழக்கு விபரம் தெரியும், முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததா என்றால் அழைப்பாணை வரவில்லை என்னை அழைத்து வந்தவர் எனக்குஅண்ணன் முறை ஆவார். இந்த வழக்கு என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் மேல்கோட்டில் உள்ள இடம் வேண்டும் என்று பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. என்னென்ன பத்திரங்கள் உள்ளது, என்னென்ன அளவுகள் கண்டுள்ளது என்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வேறு என்னென்ன வழக்குகள் தாவாச் சொத்து சம்மந்தமாக தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்ற விவரம் என்குக தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதி சக்திவேலை தெரியுமா என்றால் தெரியும் அவர் கணியூரில் ஓம் முருகா திருமண மண்டபம் வைத்துள்ளார். மேற்படி திருமண மண்டபம் உள்ள சொத்து யார் ? பெயரில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால்

தெரியாது. திலகவதி பெயரில் உள்ள பத்திரத்தை நான் படித்துப் பார்த்துள்ளேனா அதில் சுவர் பற்றிய என்ன விவரம் கண்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த முதல் விசாரணையில் உள்ள விவரங்களை நான் தான் சொன்னேன்.

(2) நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் தென்வடல் சுவர் குறிப்பிட்டு என்ன நீளம், அகலம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி சுவற்றை பூசி பராமரிப்பு செய்ய பிரதிவாதியிடம் எப்போது வாதி சென்று கேட்டார்கள் என்ற விவரத்தை முதல் விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தான் பொன்ராஜ் என்பதை காட்டுவதற்குண்டான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு வயது 25 என்றால் தவறு 35 வயது ஆகும். நான் தான் பொன்ராஜ் என்று காட்டுவதற்குண்டான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யாத காரணத்தினாலும், எனது வயது 35 ஆக உள்ள நிலையில் எனது முதல் விசாரணையில் 25 வயது என்று குறிப்பிட்டுள்ளதாலும் நான் பொன்ராஜ் அல்ல என்றால் சரியல்ல. 2000 ம் ஆண்டு எனக்கு என்ன வயது என்றால் 10 வயது இருக்கும். அப்போது நான்காம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தேன். அப்போது வாதி, பிரதிவாதிக்கு இடையே என்ன உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது என்பதும், அப்போது காம்பவுண்ட் சுவர் கட்டிய விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆனால் மேற்படி விவரங்கள் பற்றி எனது முதல் விசாரணையில் நான் சொன்னதாக குறிப்பிட்டுள்ளது நான் சொன்னதல்ல என்றால் சரிதான். எனக்கு வழக்கு பற்றிய விவரங்கள் தெரியாமல் வாதியின் கணவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.03.11 10:46:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்